Registered with the Registrar of NewsPapers for India R. No. 62828 / 95
Date of Publication : 1st of Every month    Date of Posting : 5th & 6th of Every month
Regd. No. TN / CC (S) DN / 119 / 12-14    Licensed to Post without Prepayment
WPP No. TN/PMG(CCR)/WPP-608/12-14

வேணு : 20    டிசம்பர் 2014    கானம் : 5




Published by S.Srinivasan on behalf of Guruji Sri Muralidhara Swamigal Mission, New No.2, Old No.24, Netaji Nagar, Jafferkhanpet, Chennai - 600083 and Printed by Mr.R.Kumaravel of Raj Thilak Printers (P) Ltd, 1/545A, Sivakasi Co-Op Society Industrial Estate, Sivakasi. Editor: S.Sridhar

ஸ்ரீ ஹரி:

தனி பிரதி Rs.10/-

# மதுரமுரளி

MADHURA MURALI

ஆண்டு சந்தா ரூ120/-

மஹாரண்யம் ஸ்ரீஸ்ரீ முரளீதர ஸ்வாமிஜி அவர்கள் அருளாசியுடன்
வெளிவரும் தெய்வீக மாதப்பத்திரிக்கை



வேணு : 20    டிசம்பர் 2014    கானம் : 5

RENEW / SUBSCRIBE immediately: helpdesk@madhuramurali.org



நவம்பர் 9 திருநாங்கூர் திவ்ய தேசம் – திருவிண்ணகரம் ஸ்ரீவைகுண்டநாதர் திருக்கோவில் சம்ப்ரோக்ஷணம்








நவம்பர் 14 ஸ்ரீபெரும்புதூர் விவேகானந்தா வித்யாலயா மாணவர்கள் மதுரபுரி ஆஸ்ரமத்தில் குழந்தைகள் தினத்தன்று





நவம்பர் 3 - ஏகாதசி - விட்டலாபுரம் ஸ்ரீபாண்டுரங்கன் கோவிலில்

RENEW / SUBSCRIBE immediately: helpdesk@madhuramurali.org



அக்டோபர் 24 – 29 ஸ்ரீஸ்வாமிஜி அவர்களின் திருநக்ஷத்ர வைபவம் –ஜனாபாய் டிரஸ்ட் சார்பாக சென்னை அயோத்யா மண்டபத்தில் அகண்ட நாம கீர்த்தனம் – சத்சங்கங்கள்.



நவம்பர் 2 – மதுரை செல்லம் சோப் மஹாலில் மஹாமந்திர கூட்டு ப்ரார்த்தனை முரளிஜி




நவம்பர் 8 – அமெரிக்கா ஹூஸ்டனில் ராமானுஜம்ஜி முன்னிலையில் புதிய நாமத்வார் கட்டிட பணி துவக்கம்



அக்டோபர் 29 – நவம்பர் 4 – அமெரிக்கா அட்லாண்டாவில் ஸ்ரீமத் பாகவத சப்தாஹம் – கோபகுமார நிகழ்ச்சி – ராமானுஜம்ஜி





RENEW / SUBSCRIBE immediately: helpdesk@madhuramurali.org






RENEW / SUBSCRIBE immediately: helpdesk@madhuramurali.org

ஸ்ரீ ஹரி :
மஹாரண்யம் ஸ்ரீ ஸ்ரீ முரளீதர ஸ்வாமிஜி
அவர்கள் அருளாசியுடன்

# மதுரமுரளி

தெய்வீக மாதப் பத்திரிகை

வேணு: 20 டிசம்பர் 2014 கானம்: 5

**ஹரே ராம ஹரே ராம ராம ராம ஹரே ஹரே**
**ஹரே க்ருஷ்ண ஹரே க்ருஷ்ண க்ருஷ்ண க்ருஷ்ண ஹரே ஹரே**

இந்த இதழில் ...


| | | | |
|---|---|---|---|
| மதுரமான மஹனீயர்-225 | 03 | வீடு தேடி வருவான் விட்டலன் | 22 |
| ஸ்ரீஸ்வாமிஜியின் பதில்கள் | 06 | பாலகர்களுக்கு ஒரு கதை | 24 |
| பாகவத பழம்- ஸ்க 2/19 | 07 | துளசி பூஜை | 29 |
| திருவிண்ணகரம் | 09 | மாலே மணிவண்ணா | 31 |
| கனவும் நிஜமே | 12 | ஸ்ரீமஹாபெரியவாள் கருணை | 33 |
| உதிர்ந்த மலர்கள் | 14 | | |


வரமிமமுபதேச சமாத்ரியத்வம்
நிகமவநேஷு நிதாந்த சாரகிந்ந:
விசிநுத பவநேஸஷு வல்லவீநாம்
உபநிஷதர்த்தம் உலூகலே நிபத்தம்

உபநிஷதங்களை கற்று, அதன் சாரத்தை தேடி முடிவு தெரியாமல் சோர்ந்து போக வேண்டாம்! ப்ருந்தாவனத்தில் எப்படி ஒரு கோபி அந்த உபநிஷத மூலத்தை உரலில் கட்டினாளோ, அப்படி தேடுங்கள்!

- லீலா சுகர் (க்ருஷ்ண கர்ணாம்ருதம் 2.28)

நாமரூபங்களை கடந்த வாக்கிற்கும் மனதிற்கும் அறிவிற்கும் எட்டாத பரம்பொருளை, சுகரையும் ஜடபரதரையும் போல், சாக்ஷாத்காரம் செய்வது பெரிய விஷயம் அல்ல. அந்த பரம்பொருளை ஒரு உரலில் கட்டி போடுவது அல்லவோ பெரிது!

RENEW / SUBSCRIBE immediately: helpdesk@madhuramurali.org

## ஸ்ரீஸ்வாமிஜியின் கீர்த்தனம்

ராகம்: தர்பார் தாளம்: த்ரிபுட

நாமம் சொல்லிடும் நாளெல்லாம் நல்ல நாளே - ஹரி
(நாமம் ..)

உண்மை பக்தர்களுடன் கூடி அவன் புகழ் பாடி
ஆடி களித்திடும் நாளெல்லாம் நல்ல நாளே (நாமம் ..)

குருநாதர் சரணத்தை அடைந்து அடைக்கலம் புகுந்து
தொண்டு செய்து வாழ்ந்திடும் நாளெல்லாம் - நல்ல நாளே
(நாமம் ..)

ஸ்ரத்தா பக்தியுடன் பாகவத பாராயணம் செய்து
கதை சொல்லி கேட்டு மகிழ்ந்திடும் நாளெல்லாம் - நல்ல
நாளே (நாமம் ..)


ஒருநாளில் ஒரு கணம் கூட வீண்பொழுது போக்காமல்
கண்ணன் நினைவிலே வாழ்ந்திடும் நாளெல்லாம் - நல்ல
நாளே (நாமம் ..)

கண்ணனின் மறு வடிவம் அவன் அடியார்களை
தரிசனம் செய்திடும் நாளெல்லாம் - நல்ல நாளே (நாமம் ..)

துளசி வ்ருக்ஷி முல்லை மல்லி தாமரை மலர் கொண்டு
பூஜை செய்திடும் நாளெல்லாம் - நல்ல நாளே (நாமம் ..)

நேற்றைய நாளை விட இன்றைய நாளில்
சற்றேனும் மாற்றம் இருந்தால் - நல்ல நாளே (நாமம் ..)

முன் அட்டை: திருநாங்கூர் திவ்யதேசம் - திருவிண்ணகர ஸ்ரீவைகுண்டநாத பெருமாள் கோவில் சம்ப்ரோக்ஷணம் நவம்பர் 9





RENEW / SUBSCRIBE immediately: helpdesk@madhuramurali.org

# மதுரமான
# மஹனீயர் - 225

-டாக்டர். ஆ.பாக்யநாதன்

அமெரிக்கா, மஸ்கட், ஆஸ்திரேலியா, துபாய், இந்தோனேஷியா, அபுதாபி, சிங்கப்பூர், மலேசியா, லண்டன், நியூசிலாந்து, பீஜித்தீவுகள், பப்புவா நியுகினி போன்ற பல நாடுகளில், நம்முடைய சத்சங்க அன்பர்கள் பலர் வாழ்ந்து வருகின்றார்கள். அவர்களுடன் சில காலம் இருந்து வர செல்லும் அவர்களுடைய பெற்றோர்கள் மற்றும் உறவினர்கள் இந்தியா வந்தவுடன், ஸ்ரீஸ்வாமிஜியை தரிசனம் செய்ய வருவார்கள். அப்படி வரும்பொழுது, அவர்கள் அங்கு இருக்கும்பொழுது கிடைத்த சத்சங்க அனுபவத்தையும் ஆனந்தத்தையும், வாய் ஓயாமல் சொல்லி கொண்டே இருப்பார்கள். 2வயது குழந்தை முதல் எல்லோரும், "குருஜி குருஜி" என்று ஆசையாக உள்ளார்கள். குருஜி என்ற ஒரு வார்த்தைக்கு, மந்திரத்திற்கு கட்டுப்படுவது போல், எல்லோரும் கட்டுப்படுகின்றார்கள் என்பார்கள். அங்கு அப்படி ஒரு நாம மழை பொழிகின்றது; உத்ஸவங்கள் நடக்கின்றது என்பார்கள்.

அங்கிருந்து, இந்தியாவில் வந்து குடியேறும்படி சிலருக்கு நேரும். அவர்கள் எங்களுக்கு அங்கு கிடைத்தாற்போல் சத்சங்கம் இங்கு கிடைக்கவில்லை என்று ஸ்ரீஸ்வாமிஜியிடமே கூறுவார்கள். **Atlanta USA**வை சேர்ந்த பாலாஜி நரசிம்மனின் குழந்தைகள் வந்திருந்தபொழுது, அந்த குழந்தைகள் தூங்கி கொண்டே குந்தி ஸ்துதி, பீஷ்ம ஸ்துதி சொல்லியதை கேட்டு ஸ்ரீஸ்வாமிஜி ஆனந்தப்பட்ட காட்சியை மறக்கவே முடியாது.

உலகில் பல இடங்களில், நாமத்வார் பணிகள் நடந்து கொண்டே இருக்கின்றன. **2014** நவம்பர் **8**ஆம் தேதி ராமானுஜம்ஜி அவர்கள் முன்னிலையில் ஹூஸ்டன் புதிய நாமத்வாரிற்கு பூமி பூஜை நடந்தது. சென்ற வருடம் சிட்னி நகரில் துவங்கிய ஆஸ்திரேலியா நாமத்வார் கட்டிட பணிகள், நிறைவு பெறும் நிலையை நெருங்கி கொண்டிருக்கின்றது.

ஸ்ரீநந்த்-கிருத்திகா தம்பதிகள் நமது அமெரிக்கா சத்சங்கத்தின் அன்பர்கள். கிருத்திகாவின் தாயார் **2008**ஆம்



RENEW / SUBSCRIBE immediately: helpdesk@madhuramurali.org

வருடம், முதல்முதலாக ஸ்ரீஸ்வாமிஜியை தரிசனம் செய்ய ஆஸ்ரமம் வந்திருந்தார். அன்று ஸ்ரீஸ்வாமிஜி வெளியூர் சென்றிருந்ததால் தரிசனம் கிடைக்கவில்லை. ஸ்ரீஸ்வாமிஜியின் போட்டோவை வாங்கி சென்று, தன் வீட்டில் வைத்து அதன் முன்பாக அமர்ந்து, தினமும் மஹாமந்திர கீர்த்தனம் செய்து வந்தார். அமெரிக்காவிற்கு சென்றபொழுது, அங்கு நடந்த எல்லா சத்சங்கங்களிலும் விடாமல் கலந்து கொண்டார். பிறகு இந்தியா வந்து, ஸ்ரீஸ்வாமிஜியை தரிசனம் செய்தார். தொடர்ந்து ஸ்ரீஸ்வாமிஜியை தரிசனம் செய்ய வேண்டும் என்ற ஆசையில், ஒரு பாகவத சப்தாஹம் நடக்கும்பொழுது, ஆஸ்ரமத்தில் வந்து தங்கி இருந்தார்.

ஸ்ரீநந்த்-கிருத்திகா இருவரும், ஸ்வாமிஜியிடம் புத்திர பாக்கியம் வேண்டும் என்று ப்ரார்த்தித்தார்கள். ஸ்ரீஸ்வாமிஜி சிறிது நேரம் தியானம் செய்து விட்டு, "உங்களுக்கு குழந்தை அல்ல; குழந்தைகள் பிறக்கும்" என்று சொல்லிக்கொண்டே பிரசாதம் தந்தருளினார். அதன் மர்மம் பின்னால் குழந்தைகள் பிறந்த போதுதான் புரிந்தது. ஆம்! அவர்களுக்கு **Twins** பிறந்தார்கள். ஸ்ரீஸ்வாமிஜி, அந்த குழந்தைகளுக்கு ராமன், லக்ஷ்மணன் என்று நாமகரணம் செய்தார்கள்.

ஸ்ரீஸ்வாமிஜியை **Gurujipa** (அப்பா) என்றுதான் பாசத்துடன் அழைப்பார், கிருத்திகாவின் தாயாரான சியாமளா. அவருடைய தேகம், புற்று நோயால் பாதிக்கப்பட்டது. அதனால் சரீரத்தில் வலி தாங்க முடியாததாக இருந்தது. எப்பொழுதும் மஹாமந்திரத்தை சொல்லிக்கொண்டு, ஸ்ரீஸ்வாமிஜியையும் நினைத்துக் கொண்டே இருப்பார். அப்படியும் ஏகாதசிக்கு வந்து விடுவார் சியாமளா. ஸ்ரீஸ்வாமிஜி தன்னை பார்த்து விசாரிப்பதே தனக்கு ஆறுதல் அளிக்கின்றது என்பார்.

கிருத்திகா, தன் தாயாரிடம் எதார்த்தமாக "நீ இந்த உலகத்தை விட்டு பிரிந்து விடுவாய். அதற்கு பிறகு உன் ஸ்தானத்தில் யார் எனக்கு அறிவுரை கூறுவார்?" என்பார். அதற்கு சியாமளா, "நான் பிரிந்தால் என்ன? உன்னையும் உன் குடும்பத்தையும், எப்பொழுதும் பார்த்துக்கொள்ள, அருமையான குரு கிடைத்திருக்கிறாரே" என்று திட நம்பிக்கையுடன் சொல்வார்!



RENEW / SUBSCRIBE immediately: helpdesk@madhuramurali.org

கடைசியில் சில நாட்கள், அவரால் ஸ்ரீஸ்வாமிஜியை தரிசனம் செய்ய வர முடியவில்லை. இருந்தாலும் நாமா சொல்லிக்கொண்டே, ஸ்ரீஸ்வாமிஜியை தியானம் செய்து கொண்டிருப்பார். இப்பொழுதெல்லாம், நம்மால் முன்பு போல் ஸ்ரீஸ்வாமிஜியை தரிசனம் செய்ய முடியவில்லையே என்ற வருத்தம், அவருக்கு அதிகமாக இருந்தது. அவரது கணவர் தினமும், அடையார் பத்மநாப ஸ்வாமி கோவிலுக்கு சென்று தரிசனம் செய்து விட்டு, பிரசாதம் எடுத்து வந்து மனைவியிடம் தருவார். அன்று தீர்த்த பிரசாதம் எடுத்துக் கொண்டு விட்டு குங்குமத்தை எடுத்துக் கொள்வதற்காக, அந்த குங்குமம் இருந்த பொட்டலத்தை பிரித்தார். அந்த குங்குமம் கட்டியிருந்த பேப்பரை தற்செயலாக பார்த்தால், அந்த நியூஸ்பேப்பரில் குருஜி படம் இருந்தது. இதைப்பார்த்த சியாமளா அடைந்த ஆனந்தத்திற்கும், வியப்பிற்கும் எல்லையே இல்லை. "என்னை பார்க்க Gurujipaவே நேரில் வந்துவிட்டார்" என்று சொல்லி சந்தோஷப்பட்டார்.

இது நடந்து இரு நாட்களிலேயே அவர்கள் ஸ்ரீகிருஷ்ண சரணங்களை அடைந்து விட்டார்கள். அவர் தன் மகளிடம் உயிர் பிரியும் முன் கடைசியாக சொன்ன வார்த்தைகளும் "குருவே சரணம்" என்பது மிக ஆச்சரியமான விஷயம்!


GOD Global Organisation for Divinity

**GLOBAL ORGANISATION FOR DIVINITY INDIA TRUST**

## Prayer is soul healing

**2015 ஆங்கில புத்தாண்டு மஹாமந்திர கூட்டு பிரார்த்தனை**

**ஜனவரி 1, 2015**
**வியாழக்கிழமை**
**வைகுண்ட ஏகாதசி**

இடம்: G.K.Shetty விவேகானந்தா வித்யாலயா ஜூனியர் காலேஜ், பி.டி.எச் ரோடு, அம்பத்தூர், சென்னை -53

TIME 5.30 PM

**அனைவரும் வருக! திருவருள் பெறுக!**
**அனுமதி இலவசம்!**





RENEW / SUBSCRIBE immediately: helpdesk@madhuramurali.org



# பக்தர்களின் கேள்விகளுக்கு ஸ்ரீ ஸ்வாமிஜீ அவர்களின் பதில்கள்

**கேள்வி:** நாமகீர்த்தனம் மிக எளிய மார்க்கம் என்று அடிக்கடி சொல்கின்றீர்களே!

**பதில்:** பல பெற்றோர் தம் குழந்தைகளை நம் சத்சங்கத்திற்கு அழைத்து வருவர். அப்பொழுது குழந்தைகளை காட்டி "குழந்தை ஹரே ராமா நன்றாக சொல்லும்" என்பர். குழந்தைகளும் அழகாக கையை தட்டி, "ஹரே ராம" கீர்த்தனம் சொல்லும். அந்த குழந்தைக்கு யோகமோ, ஞானமோ, விசாரமோ சொல்லித் தர முடியாது. ஆனால் அந்த குழந்தையால் கீர்த்தனம் சுலபமாக செய்ய முடிகிறது. ஒரு குழந்தையால் கூட, எளிமையாக பழக கூடிய மார்க்கமாக இது இருக்கிறது என்பதை இது எடுத்துக்காட்டுகிறது. மேலும் இது மிக எளிமையானது மட்டுமல்ல; பாதுகாப்பானது; சர்வ நிச்சயமாக பகவானிடம் கொண்டு சேர்க்க வல்லது.

---

*ஸ்ரீ ஸ்ரீ முரளீதர ஸ்வாமிஜீ* அவர்களின் அருளாசியுடன்
**சைதன்ய மஹாப்ரபு நாம பிக்ஷா கேந்திரா** வழங்கும்
8ஆம் ஆண்டு **தெய்வத் தமிழ் இசைவிழா**

*டிச 19 முதல் டிச 25 வரை நேரம்: மாலை 7 முதல் 9மணி வரை*
*இடம்– மஹோதயா ஹால், 7வது அவென்யூ, அசோக்நகர், சென்னை*

| தேதி | கீர்த்தனங்கள் பாடியவர் | - பாடும் கலைஞர் |
|---|---|---|
| டிச **19** | ஸ்ரீகோபாலகிருஷ்ண பாரதி | - திரு.சுப்ரமண்யம் |
| டிச **20** | ஸ்ரீஅருணாசல கவிராயர் | - செல்வி ரஞ்சனிசந்தானகோபாலன் |
| டிச **21** | நாலாயிர திவ்ய பிரபந்தம் | - திருமதி காயத்ரி கிரீஷ் |
| டிச **22** | நாதஸ்வர மங்கல இசையில் தமிழ் கீர்த்தனங்கள் | - திரு. கடலூர் பாலசந்தர் மற்றும் பாலமுருகன் குழுவினர் |
| டிச **23** | திருவருட்பா | - திரு. குன்னக்குடி பாலமுரளிகிருஷ்ணா |
| டிச **24** | மஹாகவி பாரதி | - சிலோன் சகோதரிகள் திருமதி வசந்தா சங்கர்ராமன் மற்றும் ரேவதி நடராஜன் |
| டிச **25** | ஸ்ரீ ஸ்ரீ முரளீதர ஸ்வாமிஜி அவர்களின் தமிழ் கீர்த்தனங்கள் "மதுரகீதம்" | - திரு.ப்ரதீப் ஜானகிராமன் குழுவினர் |

***அனைவரும் வருக! ... அனுமதி இலவசம்***



RENEW / SUBSCRIBE immediately: helpdesk@madhuramurali.org



# பாகவத பழம்

## ஸ்கந்தம் 2, அத்யாயம் 6

–ஸ்ரீ ஸ்வாமிஜி (19)

பிரம்மா நாரதரிடம் தொடர்ந்து கூறுகிறார். (சென்ற இதழ் தொடர்ச்சி...) முழு சிருஷ்டியுமே பகவானின் இந்த விராட் ரூபத்தின் ஒரு பகுதியே ஆகும். இதற்குள்தான் எல்லா ஜீவன்களும் வசிக்கின்றன. மிகவும் உயர்ந்த உலகங்களில் (ஜப, தப மற்றும் சத்ய லோகம்) தான் மரணமின்மையும், க்ஷேமமும், பயமின்மையும் வைக்கப்பட்டிருக்கின்றன. பிரஜைகளை உற்பத்தி செய்யாத ஆச்ரமங்களான பிரம்மசர்யம், வானப்ரஸ்தம் மற்றும் சந்நியாஸம் இவைகள் மூவுலகிற்கு வெளியில் இருக்கும் அவரது மூன்று பாதங்களாகும். பிரஜோத்பத்தி செய்யும் கிருஹஸ்தாச்ரமம் மூவுலகிற்கு உள்ளேயே இருக்கிறது.

ஜீவன், போகத்தையோ அல்லது மோக்ஷத்தையோ கர்ம மார்கத்திலோ அல்லது ஞானமார்கத்திலோ சென்று அடைகிறான். இந்த கர்ம மார்கம், உபாசனை மார்கம் இரண்டிற்கும் பகவானே ஆச்ரயமாக இருக்கிறார். சூரியன் எல்லாவற்றையும் பிரகாசிக்கச் செய்தாலும் தான் அதைக் காட்டிலும் தனித்து நிற்பதைபோல், இந்த பரமபுருஷனும் இந்த சிருஷ்டி முழுவதையும் பிரகாசிக்கச் செய்தபோதிலும் அவர் அதைத் தாண்டி தனிப்பொருளாகவே நிற்கிறார்.

நான் அந்த பரமாத்மாவினுடைய நாபியில் உண்டான தாமரை புஷ்பத்திலிருந்து உண்டானேன். அப்பொழுது இந்த விராட் புருஷனுடைய அவயவங்களைத் தவிர யாகம் செய்வதற்கு வேறு ஒரு பொருளை நான் பார்க்கவில்லை.

நாரத! அதனால் யாகத்திற்கு வேண்டிய அனைத்து பொருட்களையும் தக்ஷிணைகளையும், அதற்குறிய வஸந்த ருதுவையும் யாக பூமியையும் மற்றும் யாகத்திற்குத் தேவையான அனைத்தையும் அந்த புருஷனுடைய அவயவங்களிலிருந்தே சேகரித்தேன்.



RENEW / SUBSCRIBE immediately: helpdesk@madhuramurali.org

இப்படி சேகரித்தபின் யாகம் செய்து அந்த யக்ஞ ஸ்வரூ-
-பியான பகவானையே ஆராதித்தேன். பின் உனது சகோதரர்களான ஒன்பது பிரஜாபதிகளும் அவரை ஆராதித்தனர். அதன் பிறகு மனுக்களும், ரிஷிகளும், பித்ருக்களும், தேவர்களும், அஸுரர்களும், மனிதர்களும் அந்த சர்வேஸ்வரனை ஆராதித்தனர். குணங்களே இல்லாத அந்த பரம்பொருள் ஆதியில் சிருஷ்டி செய்யும் பொருட்டு மாயையால் குணங்களை எடுத்துக்கொண்டார்.

அந்த ஸ்ரீமன் நாராயணனிடத்தில் இந்த பிரபஞ்சம் அதிஷ்டிதமாக உள்ளது. நான் அவரால் நியமிக்கப்பட்டே இந்த சிருஷ்டியை செய்கிறேன். பரமேச்வரனும் அவ்விதமே நியமிக்கப்பட்டு இந்த பிரபஞ்சத்தை சம்ஹாரம் செய்கின்றார். மாயையினால் விஷ்ணுரூபத்தை தரித்து அவரே இதை பரிபாலிக்கின்றார். அப்பா! நீ பிரபஞ்சத்தைப் பற்றி எப்படி அறிய விரும்பினாயோ அது உனக்குக் கூறப்பட்டது. நாரத! ஒரு கார்ய வஸ்துவோ அல்லது அதன் காரணமோ எதுவுமே அந்த வாசுதேவனைக் காட்டிலும் வேறு ஒரு பொருள் இந்த சிருஷ்டியில் கிடையவே கிடையாது.

ந பாரதீ மே(அ)ங்க ம்ருஷோபலக்ஷ்யதே
ந வை க்வசின்மே மனஸோ ம்ருஷாகதி:
ந மே ஹ்ருஷீகாணி பதந்த்யஸத்பதே
யன்மே ஹ்ருதௌத்கண்ட்யவதா த்ருதோ ஹரி: 2.6.33

எனது வாக்கிலிருந்து ஒருபொழுதும் பொய்யானது வரவே வராது. எனது மனதின் வழியும் ஒருகாலும் பொய்யான வழியில் செல்வதே இல்லை. என்னுடைய இந்திரியங்களும் ஒரு நாளும் துர்மார்கத்தில் செல்வதே இல்லை. ஏன் தெரியுமா? ஏனென்றால், மனதினால் நான் மிகுந்த பக்தியுடன் அந்த ஸ்ரீஹரியை எப்பொழுதும் தரிக்கின்றேன்.

நான் வேதஸ்வரூபியும், தபோரூபியும், பிரஜாபதிகளுக்கு தந்தையுமாக இருந்து சிறந்த யோகத்தால் ஒருமுகப்பட்ட மனதை கொண்டவனாக இருந்தபோதிலும், அந்த பரமாத்மாவை அறியவில்லை. ஆகாசம் தனது முடிவை அறியாததுபோல், அந்த பரமாத்மாவே தனது மாயையின் எல்லையையும், விஸ்தாரத்தையும் அறியவில்லை. அப்படி இருக்கும் போது மற்றவர்கள் அதை எப்படி அறிய முடியும்? (கனியும்)



RENEW / SUBSCRIBE immediately: helpdesk@madhuramurali.org

# திருவிண்ணகரம்

- டாக்டர் ஆ.பாக்யநாதன்

திருநாங்கூர் திவ்யதேசங்களை சேர்ந்த வைகுந்த விண்ணகரம் திவ்யதேசத்திற்கு, **9.11.2014** அன்று மிகவும் அழகாக பாஞ்சராத்ர ஆகமப்படி சம்ப்ரோக்ஷணம் நடைபெற்றது. திரு.இரா.கண்ணன், ஐ.ஏ.எஸ். கூடுதல் தலைமை செயலாளர், சுற்றுலா, பண்பாடு மற்றும் இ.ச.அ. ஆட்சி துறை, திரு.இரா.ஜெகந்நாதன், இணை ஆணையர் இ.ச.அ. ஆட்சி துறை, திரு.இரா.மாரியப்பன், உதவி ஆணையர் இ.ச.அ. ஆட்சி துறை எல்லோரும் கலந்து கொண்டு சிறப்பித்தார்கள். எந்த திவ்யதேசத்திலும் இல்லாதபடி, பெருமாள் இந்த திவ்யதேசத்தில் மட்டும், ஸ்ரீவைகுண்டத்தில் எப்படி சேவை சாதிக்கின்றாரோ அப்படியே ஸ்ரீதேவி, பூதேவி, நீளாதேவியுடன் சேவை சாதிக்கின்றார்.

*சங்குமலி தண்டுமுதல் சக்கரம் முன் ஏந்தும்*
*தாமரைக்கண் நெடியபிரான் தான் அமரும் கோயில்*
*வங்கமலி கடலலுகில் மலிவெய்து நாங்கூர்*
*வைகுந்த விண்ணகர் மேல் வண்டறையும் பொழில்சூழ்*
*மங்கையர்தம் தலைவன் மருவலர்தம் உடல்துணிய*
*வாள்வீசும் பரகாலன் கலிகன்றி சொன்ன*
*சங்கமலி தமிழ்மாலை பத்திவை வல்லார்கள்*
*தரணியோடு விசும்பாளும் தன்மை பெறுவாரே*

- திருமங்கையாழ்வார் பாசுரம்

உற்சவரும் மூலவரும் இருவரும் ஒருவர் போலவே எழுந்தருளி உள்ளது மேலும் ஒரு சிறப்பு. இங்குள்ள தீர்த்தமும் ஸ்ரீவைகுண்டத்தில் இருப்பது போலவே, விரஜா தீர்த்தம் ஆகும். இதில் தீர்த்தமாடுவது, பகவானின் பரிபூரண அருள் உள்ளவர்களுக்கு ப்ராப்தமாகும். இந்த பெருமாளின் முக மண்டலத்தின் அழகையும், பெருமாள் அமர்ந்திருக்கும் லாவண்யத்தையும் பார்க்க ஆயிரம் கண்கள் போதாது. மூலவர் சாளக்ராம திருமேனி. திருமங்கையாழ்வாரால் மங்களாசாஸனம் செய்யப்பட்ட திவ்யதேசம். இந்த ஸம்ப்ரோக்ஷணத்தின் பொழுது, நாரதர் கோவில் வழிபாடு விஷயமாக சொல்லி உள்ள, பல விஷயங்களை, ஸ்ரீஸ்வாமிஜி அங்கிருந்த அன்பர்களுடன் பகிர்ந்து கொண்டார். அதிலிருந்து, நாரதர் கோவிலில் எப்படி நடந்து கொள்ள வேண்டும் என்று சொல்லி இருப்பதை இங்கு



RENEW / SUBSCRIBE immediately: helpdesk@madhuramurali.org

உங்களுடன் பகிர்ந்து கொள்கின்றேன்.

நாரத மஹரிஷி, கோவில்களில், எவரும் எந்த சமயத்திலும், செய்யக்கூடாத, அபராத செயல்களை உரைக்கின்றார். அவற்றை செய்தால், செய்பவருக்கு இறையருள் கிட்டாமல் போவது மட்டுமின்றி, பாபங்களும் ஏற்படும். அதோடு மட்டுமல்லாமல், கோவிலின் சான்னித்யமும் பாதிப்பிற்குள்ளாகும் என்று கூறப்பட்டுள்ளது. நாரத மஹரிஷி குறிப்பிடும் தவிர்க்கப்பட வேண்டிய 32விஷயங்கள் பின்வருமாறு:

1. காலணிகளை அணிந்து கொண்டோ, வாகனங்களிலோ கோவிலின் உள் செல்லக்கூடாது.
2. கோவில் திருவிழாக்களின்பொழுது, பொழுதுபோக்காக கண்காட்சிகளை மட்டும் கண்டு களித்து விட்டு, இறைவனை தரிசிக்காமல் வரக்கூடாது.
3. கோவிலில் தெரிந்தோ தெரியாமலோ, தகாத செயல்களை செய்யக் கூடாது.
4. தீட்டு காலங்களில், கோவிலுக்கு வரக்கூடாது.
5. ஒருகையை மட்டும் உபயோகித்து வணங்குதல் கூடாது.
6. இறைவனை வலம் வரும்பொழுது, பிரதக்ஷிணமாக வராமல் எதிர்திசையில் வரக்கூடாது.
7. சன்னதி நோக்கி கால்களை நீட்டிக்கொண்டு, உட்கார கூடாது.
8. ஆசனங்களிலோ நாற்காலிகளிலோ அமரக் கூடாது.
9. கோவில் வளாகத்தில் உணவு உட்கொள்ள கூடாது.
10. கோவில் வளாகத்தில் பக்ஷணங்களையோ, தின்பண்டங்களையோ சுவைக்க கூடாது.
11. பொய் பேசக்கூடாது.
12. உரத்த குரலில் பேசக் கூடாது.
13. ஒருவரோடு ஒருவர் வாதம் செய்யக் கூடாது.
14. கோவிலில் வேறு எதையோ நினைத்துக்கொண்டு அழுதல் கூடாது.
15. எவரும், சண்டை சச்சரவுகளில் ஈடுபட கூடாது.
16. கோவிலில் யாரும், தன்னைத்தானே இறைவன் போல் நினைத்து கொண்டு ஆசி வழங்க கூடாது.
17. அதேபோல், யாரையும் சபிக்க கூடாது.
18. யாரிடமும் கடுஞ்சொற்கள் பேசக் கூடாது.
19. கம்பளம் முதலியவற்றால், உடலை மறைத்து கொள்ள கூடாது.



RENEW / SUBSCRIBE immediately: helpdesk@madhuramurali.org

**20.** கோவிலில் கடவுள் அல்லாது, வேறு எவரையும் போற்ற கூடாது.
**21.** யாரையும் இழிவு படுத்தி பேசக் கூடாது.
**22.** அசுத்தங்கள் செய்யக் கூடாது.
**23.** அமங்களமான சொற்களை உபயோகிக்க கூடாது.
**24.** வசதி இருந்தும், அதற்கேற்ப பொருள்களை சமர்ப்பிக்காமல் கீழ்தரமான பொருட்களால் நிவேதனம் செய்யக் கூடாது.
**25.** இறைவனுக்கு அர்ப்பணிக்காத உணவை உட்கொள்ள கூடாது.
**26.** அந்தந்த காலங்களில், விளையும் பழங்கள் முதலானவற்றை, கடவுளுக்கு படைக்காமல் இருக்கக்கூடாது.
**27.** எந்த பொருளாக இருந்தாலும் சிறிது உபயோகித்து விட்டு பின்னர் இறைவனுக்கு அளிக்க கூடாது.
**28.** இறைவனை நோக்கி, நமது பின்புறத்தை காண்பிக்க கூடாது
**29.** கோவில் வளாகத்தில் பிறரை நமஸ்கரிக்க கூடாது.
**30.** கோவிலில் இருக்கும்பொழுது, குரு அங்கு வந்தால், அவரை அலக்ஷியம் செய்யக் கூடாது.
**31.** தன்னைத்தானே புகழ கூடாது.
**32.** தேவதைகளை இழிவாக பேசக்கூடாது.

---

## சனாதனப்புதிர் பகுதி 68 - <u>கேள்விகள்</u> - ஆத்ரேயன்

1. கர்ணனின் துடையை துளைத்து ரத்தத்தை உறிஞ்சிய புழுவின் பெயர் என்ன?
2. அந்த புழு முற்பிறவியில் என்னவாக இருந்தது?
3. அசுரன் ஏன் புழுவாக மாறினான்?
4. சாபத்திற்கு விமோசனம் என்ன என்று அரக்கன் கேட்டான்?
5. பரசுராமர் கர்ணனுக்கு என்ன சாபம் கொடுத்தார்?
6. பரசுராமர் ஆஸ்ரமத்தில் தங்கி வில்வித்தை கற்கும் சமயத்தில் அவன் செய்த தவறு என்ன?
7. நித்யாக்னிஹோத்ரி அந்தணர் எப்படி சபித்தார்?
8. கர்ணன் துரோணாச்சாரியாரை அணுகி ப்ரம்மாஸ்திரம் கற்றுத்தரச் சொன்னபொழுது துரோணர் என்ன கூறினார்?
9. கர்ணன் பரசுராமரிடம் எவ்வாறு தன்னை அறிமுகம் செய்து கொண்டான்?



RENEW / SUBSCRIBE immediately: helpdesk@madhuramurali.org

# கனவும் நிஜமே

நீதியரசர் ஸ்ரீ டி.எஸ்.அருணாசலம்
யோகிராம்சுரத்குமார் அவர்களின் SPIRITUAL SUCCESSOR
யோகிராம்சுரத்குமார் ஆஸ்ரமம், திருவண்ணாமலை

மதுர முரளி 2014ம் ஆண்டு, அக்டோபர் மாத இதழில் "தீர்மானிக்கப்பட்டது" என்ற தலைப்பில் சௌ.ஜனனி எழுதியுள்ள கட்டுரையை படித்தவுடன், நான் இன்ப சாகரத்தில் மூழ்கி, என் குருநாதர் யோகி ராம்சுரத்குமாருடன் அடிக்கடி தரிசன வாய்ப்புகள் கிடைத்திருந்த, முன்னைய வாய்ப்புகளின் எண்ண ஓட்டங்கள், சிறிது சிறிதாக, தலை தூக்கின. அதில் ஒரு அனுபவத்தை, உங்களுடன் பகிர்ந்து கொள்கிறேன்.

இப்போது என்னுடைய அனுபவத்திற்கு வருவோம். 1994ம் ஆண்டு பிற்பகுதியாக இருக்கலாம். பிரம்ம முகூர்த்த நேரம்; கனவு என்று கூட நினைக்க முடியாத சம்பவம்; ஆனால் கனவுதான். நான் அப்போது நீதிபதியாக இருந்ததால், என் வீட்டில், கட்டாயம் இரண்டு போலீஸ்காரர்கள், அங்கு 24 மணி நேரமும் காவல் காத்துக் கொண்டிருப்பார்கள். யோகிஜி அவர்களை எல்லாம் தாண்டி, எப்படியோ என் முதல் மர வாசக்கதவிற்கு வந்துவிட்டார். அங்கிருந்து மெல்லிய குரலில், ஜஸ்டிஸ் அருணாசலம் என்று கூப்பிடுகிறார். நான் அலறி அடித்துக் கொண்டு, கீழே வந்து, கதவை திறக்க, என் வலக்கரத்தைப் பற்றிக் கொண்டு, வீடு பற்றி எல்லாம் தெரிந்தவர் போல், மாடிப்படி வழியே, என்னை கூட்டிக் கொண்டே ஏறி, என் அலுவலக அறைக்கு அழைத்துச் சென்றார். என் நாற்காலியில் அமரச் சொன்னேன். "அது ஜஸ்டிஸ் இருக்கை, இந்தப் பிச்சைக்காரன், பக்கத்து நாற்காலியில் அமர்வான்" என்று சொல்லிக் கொண்டே, என்னை பற்றிய கரத்தை விடாமல் உட்கார்ந்துவிட்டார். நீதிபதிகள் வரலாற்றைப் பற்றி சிறிது பேசிவிட்டு, "என் நண்பா! உன்னிடமிருந்து விடை பெறுகிறேன்" என்றார். நான், "என் மனைவி மகள்களைத் தரிசனத்திற்கு அழைக்கிறேன்" என்றேன். "தேவையில்லை! என் பணி முடிந்துவிட்டது" என்றுச் சொல்லிக் கொண்டே, வாசற்கதவு வரை என்னை அழைத்து சென்றுவிட்டு, திடீரென மறைந்துவிட்டார். திகிலுடன்



RENEW / SUBSCRIBE immediately: helpdesk@madhuramurali.org

எழுந்து பார்த்தால், என் படுக்கையில் நான் இருக்கிறேன். பயமும், ஆச்சர்யமும் இணைந்து என்னை ஆட்கொண்டன.

மறுநாள் காலை என் மனைவி, என்னிடம், தான் கண்ட கனவைப் பற்றி உடனே தெரிவிக்க வேண்டும் என்று சொல்ல, "சரி சொல்லி விடு" என்று பகர்ந்தேன். அவளுக்கு பிரம்ம முகூர்த்த நேரத்தில் ஒரு கனவு; யோகிஜி அவளை பெயர் சொல்லிக் கூப்பிட்டு, "மேலே போகலாம் வா லக்ஷ்மி" என்றாராம். இருவரும், மேல் மொட்டை மாடிக்குச் சென்று இருக்கின்றனர். பொதுவாக குடும்பம், பக்தி பற்றி எல்லாம் பேசிவிட்டு, அவளுடன் கீழே வந்துள்ளார். அவள், "என் கணவருக்கும் மகள்களுக்கும் தரிசனம் கொடுங்கள்; நான் அழைத்து வருகிறேன்" எனச் சொல்ல, "வேண்டாம் லக்ஷ்மி, அப்பாவின் வேலை முடிந்துவிட்டது" என்று சொல்லிக் கொண்டே, கதவருகில் இருந்து மறைந்துவிட்டாராம். என் கனவைப் பற்றி அவளுக்கு நான் விளக்க, இருவரும் ஸ்தம்பித்துப் போனோம்.

மறுமுறை திருவண்ணாமலைக்கு பகவான் தரிசனத்திற்காக வந்தபோது, அம்மகானிடம் எங்கள் இருவரின் கனவுகளைப் பற்றி விவரமாகக் கூறினேன். பொறுமையாக கேட்டுவிட்டு, "என் நண்பா! அது கனவல்ல. இந்த பிச்சைக்காரன், அன்று உங்கள் வீட்டிற்கு வந்திருந்து, தனித் தனியாக உங்களையும், உங்கள் மனைவியையும் பார்த்துப் பேசிவிட்டு, எந்தையின் உத்தரவுடன் திரும்பி விட்டேன். அன்று நடந்தது எல்லாம் நிஜம்தான். அப்பாவிற்கு விளம்பரம் பிடிக்காது என்பதினால், கனவு போல் காட்டியுள்ளார்" என்று சொல்லிவிட்டு குலுங்கக் குலுங்கச் சிரித்தார். ஸ்ரீ ஸ்ரீ குருஜி கூறியிருப்பதுபோல், "Nothing is in our hands. Everything is pre - destined. Only a Guru can see us, see inside us and see through us". நாம் எல்லாம், குரு கடாக்ஷத்திற்கு பாத்திரமாகியுள்ளது, நமக்குக் கிடைத்த வரப்பிரசாதமே.

**அக்டோபர் 4 முதல்** (4.10.2014) - **காலை 7.20 - 7.30AM**
**ஒவ்வொரு சனிக்கிழமையும்** ***பொதிகை*** **தொலைக்காட்சியில்**
"***மதுரகீதம்***" - **ஸ்ரீஸ்ரீஸ்வாமிஜி அவர்களின் கீர்த்தனங்களை**
**ஸ்ரீஅஸ்வின்குமார் பாடும் நிகழ்ச்சி ஒளிபரப்பாகிறது.**



RENEW / SUBSCRIBE immediately: helpdesk@madhuramurali.org

# உதிர்ந்த மலர்கள்

- ஸ்ரீபத்மபாதர்

இந்த வருடம் கோஷ்டாஷ்டமி அன்று, ஸ்வாமிகள் கோவிந்தபுரம் சைதன்யகுடீரத்தில் தங்கி இருந்தார். முதல் நாள் ஸப்தமி அன்று, மாலை மன்னார்குடி சென்று ராஜகோபாலனை தரிசனம் செய்து வந்தார். கோஷ்டாஷ்டமி அன்று பலவிதமான அன்னங்கள், பழங்கள், பக்ஷணங்கள் எல்லாம் ஜகந்நாதருக்கு நிவேதனம் செய்தார். விதம் விதமான புஷ்பங்களை வர்ஷித்து, கோவிந்த நாம கோஷமும் செய்யப்பட்டது. ஸ்வாமிகள் அன்று கோவிந்த பட்டாபிஷேகம் பிரவசனம் செய்தார். அதில் இருந்து, சில விஷயங்களை இங்கு சமர்ப்பிக்கின்றேன்.

ராமர் பிறந்த உடன், கௌசல்யா ராமன் ஆகி விட்டார். பிறகு தசரத ராமன், யக்ஞ ராமன், பதீத பாவன ராமன், ஜானகிராமன் என்று பெயர்கள் எல்லாம் அடுத்தடுத்து வந்து விட்டது. ஆனால் ராஜாராமன் என்ற பெயரை அடைய, அவர் வனவாசம் உள்பட, பல சிரமங்களை அடைய வேண்டி இருந்தது. 14 வருடங்கள் வனவாசத்தில் பல சோதனைகளையும் கஷ்டங்களையும் அனுபவித்தபிறகே பட்டம் கட்டி கொண்டார். பிறகுதான், அவர் ராஜாராமன் ஆனார். ஆனால் கோபாலனோ, பிருந்தாவனத்தில் இருக்கும் பொழுதே, அதுவும் ஏழாவது வயதிலேயே, இந்திரனால் முடிசூட்டப்பட்டு, ராஜகோபாலன் ஆகி விட்டான்.

கோவிந்தபுரத்தில் காவிரி ஓடுகின்றது. அதன் கரையில் தென்னை மரம் இருக்கின்றது. ஒரு தேங்காய், தற்செயலாக அந்த நதியில் விழுகின்றது. அந்த தேங்காயை, நதி ஓட்டம் எடுத்துச் சென்று, சமுத்திரத்தில் சேர்த்து விடுகின்றது. இதில் தேங்காயின் பிரயத்தனம் எதுவுமில்லை. அதுபோல், ஒரு காகிதம் குப்பையில் கிடந்தது. காற்று சிறிது சிறிதாக, அடிக்க ஆரம்பித்து வேகமாக வீசியது. அப்பொழுது, அந்த காகிதம் அப்படி பறந்து, இப்படி பறந்து, மேலே போய், கீழே இறங்கி கடைசியாக, கோயில் கோபுரத்தில் மேலே சென்று அப்படியே ஒட்டி கொண்டு விட்டது. இதில், காகிதத்தின் சாமர்த்தியம் என்ன? அதுபோல், பாவங்கள் பல செய்தவனையும், துஷ்டனையும், அசடையும், அகங்காரம் உடையவனையும் கூட க்ருபை என்ற ஒரு காற்று, அவன் மேல் வீசி, அவனை உத்தம குருவின் சரணத்தில் சேர்த்து விடுகின்றது.



RENEW / SUBSCRIBE immediately: helpdesk@madhuramurali.org

## GOD India Cleanup Day - 2014 (*நவம்பர் 2*)

ஸ்ரீஸ்வாமிஜி அவர்களின் அருளாசிகளுடன், ஒவ்வொரு வருடமும் குளோபல் ஆர்கனைசேஷன் பார் டிவினிடி அமைப்பின் சார்பாக நடத்தப்பெறும் பல சமூக நிகழ்ச்சிகளின் ஒரு அங்கமாக, தூய்மை தினமும் அனுசரிக்கப்பட்டு வருகிறது. இவ்வருடம் **GOD** சத்சங்க அன்பர்கள் நவம்பர் **2**ஆம் தேதியை **4**ஆம் வருட தூய்மை தினமாக அனுசரித்தனர்.

சென்னை பட்டினப்பாக்கத்தில் மெரினா பீச்சிலும், அண்ணாநகர் அன்பர்கள் திருநின்றவூர் பக்தவத்சல பெருமாள் கோவிலிலும், குரோம்பேட்டை அன்பர்கள் பல்லாவரம் முனிசிபாலிட்டி தெருக்களிலும், மாதவரம் & கொடுங்கையூர் அன்பர்கள் மூலக்கடை ஜங்க்ஷனிலும், கோவூரில் கருணாகர பெருமாள் கோவிலிலும், கவியரசு கண்ணாதாசன் நகரில் சுந்தரராஜ பெருமாள் கோவிலிலும், ஸ்ரீபெரும்புதூரில் சிவன் மற்றும் ஐயப்பன் கோவிலிலும் தூய்மை செய்யும் பணியை மேற்கொண்டனர். இது போலவே தாயில்பட்டி சத்சங்கத்தினர் கடைத்தெருக்களிலும், தூத்துக்குடியில் நான்கு மாட வீதிகளிலும், சிவகாசி நாமத்வார் அன்பர்கள் ரத வீதிகளிலும், விருதுநகரில் அரசு மருத்துவமனையிலும், அணைக்கட்டில் அரசு அலுவலகத்திலும், உடுமலைப்பேட்டை காந்திநகர் வீதிகளிலும், பெரியகுளம் கிருஷ்ணன் கோவிலிலும், தஞ்சாவூர் பெரிய கோவிலிலும், காரைக்குடி செக்காலை சிவன் கோவிலிலும், வத்தலகுண்டுவில் விசாலாக்ஷி விஸ்வநாதர் கோவிலிலும், கோவில்பட்டியில் செண்பகவல்லி அம்மன் கோவிலிலும், ராணிப்பேட்டையில் யோகநரசிம்மர் ஆலயத்திலும், உசிலம்பட்டியில் துர்கை அம்மன் கோவிலிலும், ஆற்காட்டில் சத்சங்கத்தினர் ராமகிருஷ்ண பஜனை மடம் மற்றும் தெருக்களிலும், வாலாஜாவில் ராமர் கோவிலிலும், சோளிங்கரில் ப்ரம்மதீர்த்த குளத்திலும், மதுரையில் மதனகோபாலஸ்வாமி கோவிலிலும், திருத்துறைப்பூண்டியில் ராமர் கோவிலிலும், அம்பை க்ருஷ்ணன் கோவிலிலும், ரவண சமுத்திரம் பள்ளியிலும், சிங்கப்பெருமாள் கோவிலில் நரசிம்மர் கோவிலிலும், சிவகாசி யோகிராம்சுரத்குமார் பஜனை மண்டலியினர் தெருக்களிலும், சத்சங்க அன்பர்கள் தூய்மை பணியை மேற்கொண்டனர். தூத்துக்குடி கேந்திராவினர் இது குறித்து ஒரு போட்டியும் பரிசும் வழங்கினர். இது தவிரவும், பல ஊர்களில் உள்ள **GOD** சத்சங்க அன்பர்கள் பல கோவில், முக்கிய வீதிகள், பொது இடங்களில் சுத்தம் செய்யும் பணியை மேற்கொண்டனர். இந்த சீரிய பணி மிகவும் பாராட்டுதற்குரியது என்பது சொல்லாமலே தெரிகிறதன்றோ!

RENEW / SUBSCRIBE immediately: helpdesk@madhuramurali.org

தியானம் செய்து கொண்டிருந்தேன். அப்பொழுது மனதில், நாம், எவ்வளவு நேரமாக தியானம் செய்து கொண்டிருக்கின்றோம் என்ற எண்ணம் எழுந்தது. அப்பொழுது, இரண்டு மணி நேரமாக, தியானம் செய்து கொண்டிருக்கின்றோம் என்ற எண்ணம் வந்தது. மணிநேரம் என்றால் என்ன, என்ற எண்ணமும் உடன் எழுந்தது. மணி என்றால், 60நிமிடங்கள் என்ற எண்ணமும் எழுந்தது. நிமிடம் என்றால் என்ன என்ற கேள்வி எழுந்தது. நிமிடம் என்றால், 60விநாடிகள் என்ற எண்ணமும் எழுந்தது. தொடர்ந்து வினாடி என்றால் என்ன என்ற கேள்வி எழுந்தது. உடனே, அதற்கு பதில் தெரியவில்லை. உலக நிகழ்வுகள் என்ற கற்பனையை நெறிப்படுத்தும் காலம் என்பதும் ஒரு கற்பனையே! ஜீவன் முக்தனோ காலம், தேசம், வ்யக்தி இவைகளை கடந்தவனாகின்றான்.

- மஹாரண்யம் ஸ்ரீ ஸ்ரீ முரளீதர ஸ்வாமிஜி

ஸ்வாமிகளை தரிசனம் செய்ய, ஒரு பக்தர் வந்திருந்தார். அவர், ப்ரேமிக வரதன் சன்னதியில் வெகுநேரம் நின்றபடியே, அழுதபடியே பிரார்த்தனை செய்து கொண்டிருந்தார். பிறகு, ஸ்வாமிகள் முன்பாக வந்து அமர்ந்தார். அப்பொழுது ஸ்வாமிகள், "ப்ரேமிகவரதனிடம் வெகுநேரமாக ப்ரார்த்தனை செய்து கொண்டிருந்தீர்களே? என்ன ப்ரார்த்தனை செய்து கொண்டிருந்தீர்கள்" என்று கேட்டார். அதற்கு அந்த பக்தர், பல பிறவிகளாக என்னை தொடர்ந்து வரும் பாவங்கள் எல்லாம் என்னை விட்டு விலகட்டும் என்று ப்ரார்த்தனை செய்தேன் என்றார். ஸ்வாமிகள் பதில் ஏதும் சொல்லவில்லை. அந்த பக்தர், "நான் ப்ரார்த்தனை செய்தது சரிதானே?" என்றார். அதற்கு ஸ்வாமிகள், "சரிதான். ஆனால் அதை காட்டிலும் ஜன்மா ஜன்மாவாக என்னை தொடர்ந்து வரும் அக்ஞானம் (அறியாமை) விலகட்டும் என்று ப்ரார்த்தனை செய்திருந்தால், அழகாக இருந்திருக்கும்" என்று சொன்னார். -நல்ல ஹரி



RENEW / SUBSCRIBE immediately: helpdesk@madhuramurali.org

**Our Humble Pranams to the Lotus feet of His Holiness Sri Sri Muralidhara Swamiji**



**Guruam Consulting Private Ltd**



RENEW / SUBSCRIBE immediately: helpdesk@madhuramurali.org

# வீடு தேடி வருவான் விட்டலன் – 10

தொலைக்காட்சியில் பல்லாயிரக்கணக்கான உள்ளங்களை கொள்ளை கொண்ட ஸ்ரீஸ்வாமிஜி அவர்களின் அருளுரைகளின் தொகுப்பு

பாண்டுரங்கனிடம் ஒரு விசேஷம். அவன் அமர்ந்த கோலத்தில் இல்லை. நாட்டியம் ஆடும் கோலத்தில் இல்லை. அவன் கால்கள் தூக்கியபடி இல்லை. கையில் ஆயுதங்கள் கிடையாது. அவன் கால்கள் இரண்டும் சமமாக இருக்கிறது. இதை பாகவதர்கள் "சமசரண சரோஜம்" என்று பாடுகின்றனர். சமமாக தன் பாதங்களை வைத்துக் கொண்டு இருப்பதன் மூலம், பாண்டுரங்கன் ஒரு செய்தியை சொல்கிறான். என்ன அது?

"எனக்கு ஏழையோ, பணக்காரனோ, அறிவாளியோ, முட்டாளோ, எந்த ஜாதியை சேர்ந்தவனோ, மனிதனோ, மிருகமோ, எந்த தேசத்தைச் சேர்ந்தவனோ, எல்லாம் ஒன்றே" என்பதுதான் அது. அப்படி தெரிவிப்பதை, செய்தும் காட்டுகிறான்.

எந்த ஒரு தெய்வமாவது க்ஷவரம் செய்வதற்கோ, செருப்பு தைப்பதற்கோ, வீட்டு ஓட்டை மாற்றுவதற்கோ, சமைப்பதற்கோ, மண் பானை செய்வதற்கோ வந்திருக்கிறதா என்றால் இல்லை தானே? ஆனால், இவை அனைத்தையும் தன்னையே நம்பி, தன்னையே பஜனை செய்து வந்த பக்தர்களுக்காக பாண்டுரங்கன் செய்து இருக்கிறான்.

ஆதி சங்கரர் தனது ஸ்லோகத்தில், "இடுப்பில் கை வைத்துக் கொண்டு, ஆதிமூர்த்தியான பாண்டுரங்கன், ஒரு கையில் சங்குடன், புண்டலீகனுக்கு கொடுத்த வரத்தை காப்பாற்ற, செங்கல்லின் மேல் நிற்கிறான்" என்கிறார். அவன் நிற்பது மஹாயோக பீடம் என்கிறார். அவன் தலை மேல் இருக்கும் கிரீடத்தை எடுத்தால், அவன் தலையே சிவலிங்கம் போல்தான் இருக்கும். இதையே பாகவதர்கள் "மஸ்தக லிங்கா, சொரூப லிங்கா" என்று பாடுகின்றனர். அவனது தலையில், கை வைத்து பார்த்தால், குழி போன்று ஒரு சிறு பள்ளம் இருக்கும்.

சிதம்பரத்தில் உள்ளது போலவே, சதாராவில் உத்தர சிதம்பரம் என்று ஒரு அழகான கோவிலை காஞ்சி ஸ்ரீமஹாபெரியவாள் கட்டி உள்ளார்கள். கோயிலை கட்டலாம்;



RENEW / SUBSCRIBE immediately: helpdesk@madhuramurali.org

சிவகாம சுந்தரியை வைக்கலாம்; நடராஜரையும் வைக்க முடியும்; ராஜ கோபுரத்தையும் கட்டலாம்; ஆனால் சிதம்பரம் என்றாலே சிதம்பர ரகசியம் என்று சொல்லும் விஷயத்தை எப்படி வைப்பது? எல்லோரும் இந்த கோயில் கட்டி முடித்த பிறகு, சிதம்பர ரகசியத்திற்கு என்ன செய்வது என்று யோசித்தனர்.

காஞ்சி மடத்திலேயே நன்கு படித்திருந்த ஒரு வித்வானை கூப்பிட்டு, காஞ்சி ஸ்ரீமஹாபெரியவாள், "யாருக்கும் தெரியாத சிதம்பர ரகசியத்தை நான் உனக்கு உபதேசிக்கிறேன். அதை வெள்ளி வில்வ இலைகளில் எழுது" என்றார். அந்த வித்வானுக்கு ஒரே பெருமை. யாருக்கும் தெரியாததை தனக்கு பெரியவர்கள் உபதேசித்தார்களே என்று. ஒருவருக்கும் தெரியாதபடி எழுதினார். அதன் பின்னர் அந்த வெள்ளி வில்வ இலைகளை சாம்பிராணி தைலத்தில் முக்கி எடுத்து வைத்தனர். எல்லாம் முடிந்தவுடன் ஸ்ரீபெரியவர்களே அந்த வித்வானை கூப்பிட்டு, "நான் உனக்கு உபதேசித்த சிதம்பர ரகசியம் உனக்கு மறந்து போகட்டும்" என்று சொல்லி விட்டார். இப்படி மஹாத்மாக்களுக்கு தெரியாதது எதுவுமே இருக்காது அல்லவா?

சஜ்ஜன்காட், கோபால்புரி, சதாரா போன்ற இடங்களில் காஞ்சி ஸ்ரீபெரியவர்கள் சஞ்சரித்துக் கொண்டிருந்த சமயத்தில், ஒரு தம்பதிகள் குழந்தையுடன் வந்து அவரை நமஸ்கரித்தனர். "இந்த குழந்தை பெரியவர்களின் அனுக்ரஹத்தால்தான் பிறந்தான். இவனிடம் ஒரு குறையும் இல்லை. தலையில் மட்டும் ஏதோ பள்ளம் போன்று இருக்கிறது. மருத்துவர்களிடம் காண்பித்தால் அது பற்றி கவலை இல்லை என்று சொல்லிவிட்டார்கள்" என்று மேலும் அவர்கள் சொன்னார்கள்.

காஞ்சி ஸ்ரீபெரியவர்கள் சிரித்துக் கொண்டே, "நீ என்னிடம் குழந்தை வேண்டும் என்று கேட்டபொழுது, பாண்டுரங்கனை தியானம் செய்து கொண்டிருந்தேன். கோவிலுக்கு போனால், பண்டாவின் அனுமதியுடன் அந்த பாண்டுரங்கனின் தலை மேல் கை வைத்து பார்த்தால், தலையில் ஒரு பள்ளம் போன்று இருப்பது தெரியும். அவனை தியானம் செய்து, அனுக்ரஹித்ததால், குழந்தையும் இப்படி பிறந்து இருக்கிறது" என்றார்.

(தொடரும்)



RENEW / SUBSCRIBE immediately: helpdesk@madhuramurali.org

# பாலகர்களுக்கு ஒரு கதை



## அன்னை

பொன்னம்மா ஒரு பூக்கடை நடத்தி வந்தாள். அவளுக்கு, ஆசையாய் கண்மணி என்றொரு ஒரு மகள். பொன்னம்மாவிற்கு ஒரு கண் இல்லை. அதனால் கண்மணிக்கு பொன்னம்மாவை பார்க்கவே பிடிக்காது. அவளை தன் அம்மா என்று சொல்லிக்கொள்ள வெட்கப்படுவாள். ஒருநாள் பள்ளிக்கு, பொன்னம்மா கண்மணியை எதற்கோ பார்க்க வந்திருந்தாள். அப்பொழுது, கண்மணி தோழிகளுடன் விளையாடிக் கொண்டிருந்தாள். பொன்னம்மாவை பார்த்தவுடன் வெறுப்பை காட்டி ஓடி விட்டாள். மறுநாள் அவள் தோழிகள் எல்லாம் அவளை, "உன் அம்மாவிற்கு ஒரு கண்தான்" என்று ஏகமாய் கிண்டல் செய்தனர். அவளுக்கு அவமானமாகி விட்டது. கண்மணிக்கு, அம்மா இல்லாமலே இருந்தால் பரவாயில்லை என தோன்றியது.

அன்று மாலை வீட்டிற்கு வந்தவுடன், அம்மாவை பார்த்து "அம்மா! உன்னால் எனக்கு பெருத்த அவமானமாக இருக்கிறது. நீ இல்லாமல் இருந்தால் என் வாழ்வு நன்றாக இருக்கும்" என்று கோபமும் வெறுப்புமாக பேசினாள். அதை கேட்ட அவள் அம்மா, ஒன்றும் பேசவில்லை. அமைதியாக இருந்து விட்டாள். ஆனால் கண்மணிக்கு தான் நினைத்ததை சொல்லி விட்டோம் என்று திருப்தியாக இருந்தது. அதே சமயம் தான் சொன்னதில் ஏதோ தப்பு இருக்கிறது என்றும் உள்ளுணர்வு சொன்னது.. அம்மா அடித்ததே இல்லை என்றதாலோ என்னவோ, அப்படி துடுக்காக பேசிவிட்டாள்!

அன்றிரவு குடிக்க தண்ணீருக்காக சமையலறைக்கு போனால் அம்மா அழுது கொண்டிருந்தாள். சத்தமே வரவில்லை .. கன்னங்களில் நீர் .... மகள் உறக்கம் கலைந்து எழுந்து விடுவாளே என்று சப்தமின்றி அழுகிறாள்! ஒருகணம் அவளை பார்த்த கண்மணி, முகத்தை திருப்பிக்கொண்டு படுக்க போய்விட்டாள். அன்னையை கேவலமாக பேசியது நெஞ்சில் முள்ளாக குத்தினாலும், அம்மாவிற்கு ஒரு கண் என்று பார்க்கையில், வெறுப்பு வந்தது கண்மணிக்கு! பெரியவளானால் இந்த ஏழ்மையையும், ஒரு கண் அம்மாவையும் விட்டு விட



RENEW / SUBSCRIBE immediately: helpdesk@madhuramurali.org

வேண்டும் என்று சொல்லிக் கொண்டாள்!

கண்மணி நன்கு படித்தாள். நல்ல வேலை கிடைத்தது. திருமணமான கையுடன் கணவனோடு சென்று விட்டாள். அம்மாவை மறந்து விட்டாள். குழந்தைகள் பிறந்து சொந்த வீடு அமைந்து நன்கு வாழ்க்கை சென்று கொண்டிருந்தது.. ஒருநாள் எதிர்பாராதவிதமாய் பொன்னம்மா, எப்படியோ கண்மணியின் வீடு தேடி வந்தாள். அதே ஒரு கண்ணை பார்த்தவுடன், கண்மணிக்கு கோபம் பொத்துக்கொண்டு வந்தது. பொன்னம்மாவை பார்த்தவுடன், வாழ்க்கையே சூன்யமாய் போனதாக உணர்ந்தாள் கண்மணி. ஒன்றும் தெரியாதவளை போல், "நீ யார்? இங்கு ஏன் வந்தாய்?" என்றெல்லாம் சொல்லி பொன்னம்மாவை துரத்தி விட்டாள். பொன்னம்மா ஒரு குறையும் சொல்லாமல் "அடடா! தவறி வந்து விட்டேனா!" என்று சொல்லிக்கொண்டே சென்று விட்டாள்.

"அப்பாடா! என்னை அவளுக்கு தெரியவில்லை, வாழ்க்கை முழுவதும் இவளை நினைக்க கூடாது" என்று தனக்குள் சொல்லிக்கொண்டாள் கண்மணி. ஒருநாள் கண்மணிக்கு பொன்னம்மா படுத்த படுக்கையாக இருக்கிறாளென ஒரு கடிதம் வந்தது. அதில், "கண்மணி! உன்னை நான் இனி பார்க்க முடியாது. நான் ஒற்றைகண்ணாய் இருப்பது உனக்கு ஏன் என்று தெரிய வேண்டும். சிறு வயதில் உனக்கு அடிபட்டு ஒரு கண் போய்விட்டது. நீ ஒற்றைக் கண்ணுடன் இருப்பது பொறுக்காமல் நான்தான் என் கண்ணை கொடுத்தேன். உன் மூலம் உலகை பார்ப்பதில் மகிழ்ச்சி கொள்கிறேன். உன்னை அணைக்க முடியாமல் தவிக்கிறேன். உன் அன்னை பொன்னம்மா" என்றிருந்தது அதில் ... கடிதத்தில் கண்ட முகவரிக்கு அலறி அடித்து கொண்டு ஓடி வந்தாள் கண்மணி. பார்த்தால் பொன்னம்மா உடம்பில் சலனம் அதிகமில்லை. மூச்சு மெல்லியதாக வந்து கொண்டிருந்தது. அழுகை அழுகையாக வந்தது கண்மணிக்கு .... தான் அன்னைக்கு இழைத்த துரோகத்தை நினைத்து, நெஞ்சமே வெடித்து விடும் போல இருந்தது. விம்மி விம்மி அழலானாள்.

அப்பொழுது பொன்னம்மாவின் கைகள் விரைந்து, கண்மணியை அணைத்து கொண்டன. மெலிதாக அவள் சொன்னாள், ""என் கண்மணியாச்சே! அழுதா எனக்குதான் வலிக்கும்!".



RENEW / SUBSCRIBE immediately: helpdesk@madhuramurali.org

**அக்டோபர் 24- 29** அயோத்யா மண்டபத்தில் ஜனாபாய் டிரஸ்ட் சார்பாக ஸ்ரீஸ்வாமிஜி அவர்களின் திருநக்ஷத்திர வைபவம் கொண்டாட பெற்றது. பாகவதர்கள் இன்னிசையுடன் பாட "ஹரே ராம" நாமகீர்த்தனம் காலை 6மணி முதல் மாலை 6மணி வரை அகண்டமாக நடைபெற்றது. தினமும் மாலை உபன்யாசமும் நடைபெற்றது. திரளான அன்பர்கள் கலந்து கொண்டு குருவருளும் திருவருளும் பெற்றனர்.

**நவம்பர் 3** - ஏகாதசியன்று விட்டலாபுரம் ஸ்ரீபாண்டுரங்கன் கோவிலில் ஸ்ரீஸ்வாமிஜி அவர்களின் முன்னிலையில், விசேஷ திருமஞ்சனமும் நாமகீர்த்தனமும் நடைபெற்றது. நவம்பர் 1- 8 வரை சென்னை ப்ரேமிக பவனத்தில் உதயாஸ்தமன பாகவத சப்தாஹம் நடைபெற்றது.

**நவம்பர் 9** திருநாங்கூர் திருவிண்ணகரம் ஸ்ரீவைகுண்டநாதர் திவ்யதேச திருக்கோவிலின் சம்ப்ரோக்ஷணம் ஸ்ரீஸ்வாமிஜி அவர்களின் முன்னிலையில், மிக சிறப்பாக நடைபெற்றது. ஸ்ரீஸ்வாமிஜி அவர்கள் நவம்பர் 10 அன்று கோயம்புத்தூரில் உள்ள ஸ்ரீசந்திரசேகர பாரதி ஸ்ரீசந்திரசேகர சரஸ்வதி வேத வித்யாலயா டிரஸ்ட் வேதபாடசாலைக்கு (CCVV Trust) சென்று, மஹாமந்திர க்ருஹத்தை திறந்து வைத்தார்கள்.

**நவம்பர் 14** ஸ்ரீபெரும்புதூர் விவேகானந்தா பள்ளி மாணவர்கள் குழந்தைகள் தினத்தன்று மதுரபுரி ஆஸ்ரமத்தில், ஸ்ரீஸ்வாமிஜியிடம் பிரசாதமும் ஆசியும் பெற்று சென்றார்கள்.

**அமெரிக்க சத்சங்கங்கள்** - அக்டோபர் 3 - ராமானுஜம்ஜி முன்னிலையில் போஸ்டன் நகர கோபகுடீர ஆண்டு விழா நிகழ்ச்சிகள் நடைபெற்றது. குயின்ஸியில் ஒரு மஹாமந்திர கூட்டு ப்ரார்த்தனை நிகழ்த்தினார். 4, 5 தேதிகளில் Nashua இந்து கோவில் மற்றும் லெக்ஸிங்க்டனில் பாகவத தர்மம் குறித்து உபன்யாசம் செய்தார். ஆக்டனில் அன்பர்கள் முன்பு 7ஆம் தேதி அன்று சத்சங்கம் நிகழ்த்தினார். அக்டோபர் 9 அன்று Raleigh North Carolinaவில் கோபகுடீர நிகழ்ச்சி ஒன்றில் கலந்து கொண்டு அங்குள்ள ஷீரடி சாயிபாபா கோவிலில் பாகவதம் குறித்து உரையாற்றினார். வாஷிங்டனில் 10ஆம் தேதி அன்றும் ரிச்மாண்ட் விர்ஜினியாவில் 13ஆம் தேதி வரை மதுரோத்ஸவம் மற்றும் பல சத்சங்கங்களில் அவர் கலந்து கொண்டார். அக்டோபர் 21 வரை ஸ்ரீபாலாஜி கோவில் மிச்சிகனில் பாகவத



RENEW / SUBSCRIBE immediately: helpdesk@madhuramurali.org

சப்தாஹ உபன்யாசம் செய்தார். இந்நிகழ்ச்சியை ஸ்ரீஸ்ரீதர் வெங்கடாச்சாரி ஏற்பாடு செய்திருந்தார். அக்டோபர் 22 முதல் 27 வரை மின்னியாபோலிஸில் ஸ்ரீஸ்வாமிஜி திருநக்ஷத்திரத்தை முன்னிட்டு ஸ்ரீபாலசுப்ரமணியன், ஸ்ரீமதி ப்ரியா மற்றும் அன்பர்கள் பல சத்சங்க நிகழ்ச்சிகளை ஏற்பாடு செய்திருந்தனர். தினமும் மின்னாசோட்டா இந்து கோவிலில் ராமானுஜம்ஜி பக்தர்களின் சரித்திரங்களை மிக அழகாக உபன்யாசம் செய்தார். பூர்த்தி அன்று ராதாகல்யாணமும் நடைபெற்றது. A multi-cultural musical event 'Ode to Harmony' பல சங்கீத குழுக்கள் பங்கேற்ற பல்வித கலாச்சாரத்தை ஒட்டிய நிகழ்ச்சிகளும் இடம் பெற்றிருந்தது. இதன் முடிவில் உலக அமைதிக்காக ஒரு மஹாமந்திர கூட்டுப்ப்ரார்த்தனையை ராமானுஜம்ஜி நிகழ்த்தினார். ரோசெஸ்டரிலும் பல சத்சங்கங்கள் இடம் பெற்றிருந்தன. அக்டோபர் 29 முதல் நவம்பர் 4 வரை அட்லாண்டாவில் ராமானுஜம்ஜி முன்னிலையில் பாகவத சப்தாஹம் விமரிசையாக நடைபெற்றது. இதில் காலை ராமானுஜம்ஜியின் பகவத்கீதா உபன்யாசமும், மாலை பாகவத உபன்யாசமும், இடம் பெற்றிருந்தது குறிப்பிடத்தக்கது. ஸ்ரீமதி ஜெயாகிஷோர் மற்றும் சத்சங்க அன்பர்களால், மிக விமரிசையாக பெரிய அளவில் திரளான அன்பர்கள் பங்கேற்க, நடத்த பெற்ற இந்நிகழ்ச்சியில் பூர்த்தியன்று, ராதாகல்யாணமும் அழகாக நடைபெற்றது. நவம்பர் 5,6 தேதிகளில், ஓர்லாண்டோ இந்து கோவிலில், பல அன்பர்கள் பங்கேற்ற நிகழ்ச்சியில், பாகவத தர்மம் குறித்து ராமானுஜம்ஜி உபன்யாசம் செய்தார்.

**நவம்பர் 8** ஸ்ரீஸ்வாமிஜி அவர்களின் திருவுள்ளப்படி, பல அன்பர்கள் பங்கேற்பதற்கு வசதியாகவும், மாதுரிஸகீ ஸமேத ஸ்ரீப்ரேமிகவரதனுக்கு நிரந்தர நாமஸ்தலம் தருவதற்காகவும், தற்போதைய ஹூஸ்டன் நாமத்வார் இடத்திலேயே, ஒரு **புது நாமத்வார்** கட்ட பூமி பூஜை நடைபெற்றது. ஸ்ரீஸ்வாமிஜி அவர்கள் அருளியபடியே ராமானுஜம்ஜி முன்னிலையில் மேன்வெல் மற்றும் பியர்லேண்ட் மேயர்கள் முதலிய முக்கிய ப்ரமுகர்கள் பங்கேற்க, அன்பர்கள் மஹாமந்திர கீர்த்தனம் முழங்க பல புனித தீர்த்தங்களுடன், நாமம் எழுதிய ஏடுகள் மற்றும் செங்கற்களுடன் **அடிக்கல்** நாட்டப்பட்டது. மாலை ஸ்ரீமதி ராஜராஜேஸ்வரி பட் குழு நாமத்தின் பெருமையை சொல்லும் கீர்த்தனங்களடங்கிய, அருமையான சங்கீத இன்னிசையை வழங்கினர். ஸ்ரீஸ்வாமிஜி அவர்களின் பதிவு செய்யப்பட்ட



RENEW / SUBSCRIBE immediately: helpdesk@madhuramurali.org

அனுக்ரஹ பாஷணமும் திரையிடப்பட்டது. நாமத்வார் நன்கு கட்டி முடிவதற்காகவும், உலக அமைதிக்காகவும் வேண்டி ஒரு ப்ரார்த்தனையுடன் இந்நிகழ்ச்சி இனிதே நிறைவு பெற்றது.

நவம்பர் 9இல் சைப்ரஸில் ஸ்ரீமதி லக்ஷ்மி மற்றும் ஸ்ரீமஹேஷ் ஏற்பாடு செய்த கோபகுடீர நிகழ்ச்சிகளில் கலந்து கொண்டு நாமகீர்த்தனத்தின் மேன்மை குறித்து ராமானுஜம்ஜி உரையாற்றினார். நவம்பர் 13 அன்று Love to Share Foundation சார்பாக Mindfulness for Busy Professionals என்ற தலைப்பில் MD Anderson Cancer Centerஇல் ராமானுஜம்ஜி உரையாற்றினர். பல மருத்துவர்கள், விஞ்ஞானிகள் மற்றும் பொதுமக்கள் இதில் பங்கு கொண்டு நாம மஹிமையையும் அது தியானத்திற்கு மிகுந்த வலுவூட்டுவதையும் கேட்டு மிகுந்த பயனுற்றனர்.

**நவம்பர் 2** அன்று மதுரை செல்லம் சோப் மஹாலில், முரளிஜி 700 அன்பர்களின் முன்பு ஒரு சிறப்பு மஹாமந்திர கூட்டு ப்ரார்த்தனை நிகழ்த்தினார். அக்டோபர் 27-29வரை, கடலூரில் நான்கு பள்ளிகளில் 1100 மாணாக்கர்கள் முன்பும், நவம்பரில் காரைக்குடி, திருத்தணி, திருவள்ளூர், அரக்கோணம் முதலிய ஊர்களில் 18பள்ளிகளில் 5100 மாணாக்கர்கள் முன்பாகவும் முரளிஜி மஹாமந்திர கூட்டுப்ப்ரார்த்தனை நிகழ்த்தினார்.

---

## சனாதனப்புதிர் பகுதி 68 - விடைகள் -ஆத்ரேயன்

1. அலர்கா.
2. தம்சன் என்ற அரக்கனாக.
3. ப்ருகு முனிவரின் மனைவியை அபகரித்ததால்.
4. பரசுராமரின் பார்வையால் புழு அழிந்து பழைய நிலையை அடைவாய் என்று ப்ருகு முனிவர் கூறினார்.
5. ப்ரும்மாஸ்திரம் நீ இறக்கும்வரை உன் நினைவிற்கு வராது. உபயோகப்படாது.
6. நித்யாக்னிஹோத்ரியான ஒரு அந்தணரது யாகப்பசுவை தவறுதலாக கொன்று விட்டான்.
7. ரதத்தின் சக்கரங்கள் மண்ணில் புதைந்து போகும். அப்பொழுது உன் தலை துண்டிக்கப்படும்.
8. அந்தணர்கள் அல்லது க்ஷத்ரியர்கள் மட்டுமே கற்கக்கூடிய வித்தை ப்ரும்மாஸ்திரம். ஆகவே சொல்லிக்கொடுக்க மறுத்து விட்டார்.
9. ப்ருகு குலத்தில் தோன்றிய அந்தணர் என்று.



RENEW / SUBSCRIBE immediately: helpdesk@madhuramurali.org

# துளசி பூஜை

- ஜனனி

ப்ரேமிக பவனத்தில், ஸ்ரீஸ்வாமிஜி முன்னிலையில் நவம்பர் 4 ப்ருந்தாவன த்வாதசியன்று, துளசி கல்யாணமும் உபநிஷத் பாராயணமும் நடைபெற்றது. ப்ருந்தாதேவி எனும் துளசி ஸ்ரீஹரிக்கு மிகவும் ப்ரியமானவள். அதனாலன்றோ அவள் பகவானின் சரணத்தில் மட்டுமில்லாமல், அவன் மார்பிலும் மாலையாக விளையாடுகிறாள். பகவான் கீதையில்,

*பத்ரம் புஷ்பம் பலம் தோயம் யோ மே பக்த்யா ப்ரயச்சதி*

*ததஹம் பக்த்யுபஹ்ருதம் அஷ்னாமி ப்ரயதாத்மன:* என்கிறான்.

அஷ்னாமி என்றால், சாப்பிடுகிறேன் அல்லது உட்கொள்கிறேன் என்று பொருள். இலை, பூ, பழம், நீர் இவை நான்கில் ஏதாவதொன்றை ப்ரேமையுடன் எனக்கு ஸமர்ப்பித்தால், நான் உண்கிறேன் என்று பகவான் கூறுகிறான். பழத்தை உண்கிறேன் என்றால் புரிகிறது; இலை, புஷ்பம், நீர் இவற்றை எப்படி சாப்பிட முடியும் என்ற கேள்வி எழும். இதற்கு மிக அழகான விளக்கம் கூறுவார் காஞ்சி ஸ்ரீமஹாபெரியவர்கள்.

சாப்பிடக்கூடிய இலை என்பது துளஸி அல்லது வில்வம். சாப்பிடக் கூடிய பூ என்பது வாழைப்பூ. யார் கையிலும் படாத இளநீர் மிகவும் தூய்மையானது. அதுதான் பருகக் கூடிய ஒன்று. அதனால், பகவான் கீதையில், இவைகளைத்தான் குறிக்கிறான். ஒரே ஒரு துளஸி தளத்தை, ஹரி சரணத்தில் ஸமர்ப்பித்தாலும், ஹரி மிகவும் சந்தோஷமடைகிறான். ஆயுர்வேதத்தில், துளசிக்கு ஏராளமான மருத்துவ குணங்கள் உள்ளதாக கூறப்பட்டுள்ளது. இது துளசியின் ஒரு பக்கம்தான்.

துளசி ஒரு தெய்வீகமான செடி. ஒரு இடத்தில் தானாக நிறைய துளசி செடிகள் வளர்ந்து செழித்தால், அங்கு ஹரி ஸாந்நித்யம் உள்ளது என்று நம் குருநாதர் கூறுவார். பகவானுக்கு நாம் எதையாவது நிவேதனம் செய்யும்பொழுது அதில் ஒரு துளசி தளத்தை போட்டபின்பே, செய்ய வேண்டுமாம். இல்லையேல் அதை பகவான் ஏற்க மாட்டாராம். துளசிக்கு, தன்னுடன் ஸம்பந்தப்படும் அனைத்தையும் பாவனமாக்கும் தன்மை உள்ளது. இந்து பெண்களுக்கு துளஸி வழிபாடு மிகவும் முக்கியம். ஸ்ரீமதி ராதா தேவியே துளசி பூஜை செய்து வந்தார் என்று தெரிகிறது. துளசி பூஜை செய்து வந்தால், க்ருஷ்ண பக்தி வளரும், கண்ணனையே அது தர வல்லது என்று நம் குருநாதர் கூறுவார்.



RENEW / SUBSCRIBE immediately: helpdesk@madhuramurali.org

கோபிகைகளும் ராஸத்தின் நடுவே கண்ணன் மறைந்து விட, அவனை தேடிச் செல்லும்போது, "கச்சித் துளஸி கல்யாணி கோவிந்த சரண ப்ரியே" என்று துளசியை சரணடைந்த பின்பே அவர்களுக்கு பகவானின் பாதச்சுவடுகள் கண்ணில் பட்டதாக ஸ்ரீமத்பாகவதம் கூறுகிறது. பகவானும் தன்னை ருக்மிணியின் ஒரே துளஸி தளத்திற்கு துலாபாரத்தில் ஸமமாக்கிக் கொண்டான். துளஸி தேவியின் அருளாலன்றோ, புரந்தரதாஸரின் வாழ்வில் ஒரு மாபெரும் திருப்பம் ஏற்பட்டது!

க்ருஷ்ண பக்தர்களான நாம் நித்யம் துளசியை வழிபட வேண்டும். துளசி செடியிலிருந்து இலைகள் விழுந்துவிட்டால் அந்த காஷ்டத்தையாவது அல்லது துளசியிருந்த மண்ணையாவது பூஜிக்க வேண்டும் என்று கூறப்பட்டுள்ளது.

நித்யம் துளசிக்கு தண்ணீர் விட்டு, காலை வேளையில் துளசி அருகில் விளக்கேற்றி, பின் புஷ்பாதிகளால் அர்ச்சனை செய்து, தூபம் காட்டி, பச்சை பால் அல்லது வெல்லம் நிவேதனம் செய்து, ஆரத்தி காட்டி, துளசி ஸ்தோத்திரங்கள் அல்லது பாடல்கள் பாடுவது என்று நம் குருநாதர் மிகவும் அழகான எளிமையான துளசி பூஜையை கூறியுள்ளார். ஒரு நாள் இப்படி பூஜை செய்துவிட்டு குருநாதரை வந்து ஸேவித்தபோது, அவர் மிகவும் அழகாக துளசியின் மாஹாத்மியத்தை எடுத்துரைத்தார். "துளசி பூஜை ச்ரத்தையாக செய்து வந்தால் சௌமங்கல்யம் வ்ருத்தியாகும். கன்னிப் பெண்களுக்கு நல்ல வரன் கிட்டும். கடன் தொல்லைகள் நீங்கும். குடும்பத்தில் பிரிவு அல்லது சண்டை இருந்தால், துளசி பூஜை செய்து வர குடும்பத்தில் ஒற்றுமை வளரும்; **பெண்கள் சிரத்தையுடன் துளசி பூஜை செய்துவர பிரிந்த கணவருடன் ஒன்று சேருவர்.** இவை அனைத்திற்கும் மேலாக க்ருஷ்ண பக்தி வளரும்" என்று கூறினார். மேலும் துளசியின் கிளைகளை கத்திரி போன்ற ஆயுதத்தால் வெட்டலாகாது என்றும் கூறினார். துளசி தளங்கள் காலில் படும் இடத்தில் தரையில் கிடந்தால், அதை குருநாதர் தானே அப்புறப்படுத்துவதையும், நாம் பன்முறை பார்த்திருக்கலாம்.

ஐப்பசி மாதத்தில் வரும் உத்தான ஏகாதசியின் மறுநாளான ப்ருந்தாவன த்வாதசி அல்லது சிலுக த்வாதசி அன்று, நெல்லி மர ரூபத்தில் உள்ள ஸ்ரீஹரிக்கும், துளஸி தேவிக்கும் திருக்கல்யாணம் நடைபெறும். துளசியை வழிபட்டு நாம் ஸகல க்ஷேமங்களையும் அடைவோமாக!



RENEW / SUBSCRIBE immediately: helpdesk@madhuramurali.org

# *மாலே மணிவண்ணா - 134*

–மகாவித்துவான்
மயிலம். வே. சிவசுப்பிரமணியன்



எம்பெருமானை வணங்கி மகிழும் இளையாழ்வாராகவும் எம்பெருமான் வணங்கி மகிழ பலராமராகவும் முன்னும் பின்னும் அவதரித்தமை ஒன்றே இளைய பெருமாளின் சிறப்பினை விளக்கும். அரவணையாக எம்பெருமானிற்கு விளங்கிய பலராமர் சங்க நூல்கள் பலவற்றிலும் எம்பெருமானுக்கு சமானமாக திருமால் நெறிக்குரிய கடவுளாக வணங்க பெற்றிருந்தமையை அறியலாம்.

*ஞாலங் காக்கும் கால முன்பின்*
*தோலா நல்லிசை நால்வர்* என்று சங்க காலத் தமிழ் வழிபாட்டிற்குரிய நாற்பெருங் கடவுள் வழிபாட்டை சொல்லும் புறநாநனூறு **56**ஆம் பாடல்,

*ஏற்று வலன் உரிய எரிமருள் அவிர்சடை*
*மாற்றரும் கணிச்சி மணிமிடற்றோனும்*

என்று சிவபிரானை கூறி, அடுத்து

*அகடல் வளர் புரிவளை புரையும் மேனி*
*அடல்வெம் நாஞ்சில் பனைக்கொடியோனும்*

என்று பலதேவனை கூறி

*மண்ணுறு திருமேனி புரையும் மேனி*
*விண்ணுயர் புட்கொடி விறல் வெய்யோன்*

என்று கண்ணனாகிய மணிவண்ணனை காட்டி முடிவில்
*மணிமயிர் உயரிய மாறாவென்றிப்*
*பிணி முக ஊர்தி ஒண் செய்யோனும்* என முருகப்பெருமானை கூறி முடிக்கும் பாடலில் மாலோன் ஆகிய மணிவண்ணனுக்கு முன் பலராமனை கூறி உள்ளதை காணும்போது சங்ககால திருமால் நெறியில் ஆதிசேடனாகிய பலதேவன் முன்னோனாக வழிபட பெற்றமை அறிகிறோம். அதை பின்பற்றி தனியே ஆதிசேடனை போற்றுகின்ற பாடல் பரிபாடலிலும் அமைந்துள்ளது என அறியலாம். கூடல் அழகர் கோயில் என்ற இருந்த வளம் உடையார் கோயிலில் (இருந்தையூர் எனவும் வழங்கும்) திருமால் **1.**இருந்த கோலம்



RENEW / SUBSCRIBE immediately: helpdesk@madhuramurali.org

2. நின்ற கோலம் 3. கிடந்த கோலம், என்ற மூவகை நிலையிலும் காட்சி தந்து கூடல் அழகர் என்னும் பெயருடன் ஸ்ரீதேவி, பூதேவி இருவருடனும் எழுந்தருளி உள்ளார்.

மூலவர் கோவிலின் மீது அஷ்டாங்க விமானம் உள்ளது. இருந்த கோலத்தே மூலவர் கோவிலில் தரிசிக்கிறோம். அங்கே ஆதிசேடர், எம்பெருமான் வீற்றிருக்கும் சிங்காதனமாக இருக்கிறார். முதல் மாடியில் திருமாலின் நின்ற கோலத்தை தரிசிக்கலாம். இரண்டாம் மாடியில், பள்ளி கொண்ட திருக்கோலத்தை வழிபடலாம்.

சிங்காதனமாகவும், நடந்து சென்றால் மரவடியாகவும் குடையாகவும், கிடந்தால் உறங்க நல் அணையாகவும், ஆதிசேடர் ஆழ்வார் பாடலில் கண்டவாறே அமைந்து பெருமானுடன் காட்சி தருகிறார். இத்தகைய அன்பர் உளம் ஈர்க்கும் அரவணைப்பெருமான் பெருமையை பேசி வழிபடும் பரிபாடலை இனி காண்போம்.

(தொடரும்)



# ஸ்ரீமஹா பெரியவாள் கருணை

- ப்ருமமஸ்ரீ பம்மல் ஏகாம்பரம்

1976ஆம் வருடம், மாசி மாதம் காஞ்சிபுரம் காமாக்ஷி அம்மன் கோவிலில் ப்ரும்மோத்ஸவம் நடந்து கொண்டிருந்தது. காமாக்ஷி அம்மன் கோவிலை ஒட்டி கொல்லா கன்னையா செட்டி சத்திரம் என்று ஒரு சத்திரம் உண்டு. ஸ்ரீமஹாபெரியவாள் அந்த சத்திரத்தில் தங்கி இருந்தார்கள். ப்ரும்மோத்ஸவம் முடிந்த மறுநாள் காலையில் ஸ்ரீகாமாக்ஷி அம்பாளை விஸ்வரூப தரிசனம் செய்து கொண்டார்கள். மறுநாள் காலையில் ஸ்நானம், அனுஷ்டானம், ஒரு மணி நேரம் ஜபம் முடிந்தது.

அதன் பிறகு சின்ன காஞ்சிபுரம் நோக்கி ரிக்க்ஷாவை பிடித்தபடியே நடக்க ஆரம்பித்தார்கள். காஞ்சிபுரம் பேருந்து நிலையத்தை தாண்டியவுடன் காஞ்சிபுரத்திலேயே இருந்து வரும் ஒரு வைதீகர் ஸ்ரீபெரியவாளை வந்தனம் செய்து ஸ்ரீருத்ரத்திலிருந்து "நமஸ்தே அஸ்து பகவன் .." என்று அனுவாகத்தை உச்ச ஸ்தாயியில் சொல்லி நமஸ்கரித்தார். அந்த சமயத்தில் அருகில் இருந்த எனக்கு ஸ்ரீமஹாபெரியவாள் சாக்ஷாத் கைலாசபதியான பரமேஸ்வரனாகத்தான் தெரிந்தார்கள். அதன்பிறகு மெதுவாக நடந்து வழக்கு அடுத்தீஸ்வரர் கோவில், முக்தீஸ்வரர் கோவில்களை தரிசனம் செய்து கொண்டார்கள். அப்படி வரும் வழியில்தான், காஞ்சிபுரம் வெங்குடி டாக்டர் V.ராமமூர்த்தி அய்யரின் வீடும், எதிரில் மருத்துவமனையும் உள்ளது. எப்பொழுது ஸ்ரீமஹாபெரியவாள் அந்த வழியாக வந்தாலும் டாக்டர் குடும்பத்தோடு வாசலுக்கு வந்து ஸ்ரீமஹாபெரியவாளுக்கு, பூர்ண கும்பம் கொடுத்து நமஸ்கரிப்பது வழக்கம்.

ஆனால் அன்று யாரையும் வாசலில் காணவில்லை. மருத்துவமனையும் கூட்டம் இல்லாமல் இருந்தது. ஸ்ரீபெரியவாளும் நிதானமாக அந்த இடங்களை கடந்து காலை 11மணி அளவில், வழியில் உள்ள ஸ்ரீமணிகண்டேஸ்வரர் கோவிலுக்கு வந்து ஸ்வாமி தரிசனம் செய்து கொண்டு, நல்ல வெயிலில் 11மணி அளவு போல்



RENEW / SUBSCRIBE immediately: helpdesk@madhuramurali.org

சின்ன காஞ்சிபுரம் ஆனைக்கட்டி தெருவில் உள்ள மடத்திற்கு வந்தார்கள்.

ஏற்கனவே, அந்த மடத்தில் ஸ்ரீமஹாபெரியவாள், ஸ்ரீபகவத்பாதாள் பாதுகையை பிரதிஷ்டை செய்திருந்தார்கள். ஸ்ரீமஹாபெரியவாள் அந்த அறையில் போய் தங்கினார்கள். அன்று அனுஷ்டானங்களை முடித்துக்கொண்டு, பூஜையை ஆரம்பித்து விட்டார்கள். முதல் கால பூஜை முடிந்து, இரண்டாவது கால பூஜையை ஆரம்பித்து விட்டார்கள். அந்த சமயம் எசையனூர் ப்ரும்மஸ்ரீ அப்பாகுட்டி சாஸ்திரிகள் தரிசனம் செய்து கொண்டு, அறையின் வெளியே நின்றிருந்தார்கள். ஸ்ரீமஹாபெரியவாள் இரண்டாம் கால பூஜையை முடித்துக்கொண்டும், பிக்ஷையை முடித்துக் கொண்டும்தான் வெளிவருவார்கள்.

அந்த சமயம் அப்பாகுட்டி சாஸ்திரிகளின் பெண் வயிற்று பேரன், ஸ்ரீஅனந்த நாராயணன் என்பவர் தரிசனத்திற்கு வந்தார். பூஜை நேரத்தில் உள்ளே போக முடியாது; வந்தவர் தனது தாத்தாவான அப்பாகுட்டி சாஸ்திரிகளிடம், "வெங்குடி டாக்டரின் 9மாத குழந்தைக்கு நான்கு நாட்களாக வயிற்றுப்போக்கு; அந்த குழந்தையின் அம்மா, அப்பா, தாத்தா, சின்ன தாத்தா எல்லாம் டாக்டர்கள். காஞ்சிபுரத்தின் **Government Hospital**இன் **Chief Doctor**இடம் வந்து, பார்த்து விட்டு, சென்றார்கள். குழந்தையின் நிலைமை, மிகவும் கவலைக்கிடமாக உள்ளது. ஸ்ரீமஹாபெரியவாளிடம் வெங்குடி டாக்டர் சொல்ல சொல்லி அனுப்பி உள்ளார்கள் என்றார். அப்பாகுட்டி சாஸ்திரிகள் ஸ்வதந்திரமாக பூஜைகட்டின் உள்ளே செல்வார். ஸ்ரீபெரியவாள் பூஜை செய்து கொண்டிருக்கும்பொழுதே, அவருடைய காதில் விழும்படி சொல்லி ப்ரசாதத்தை பிரார்த்தித்தார்.

ஆனால் ஸ்ரீபெரியவாளோ, பூஜையை வழக்கம் போல் செய்து கொண்டிருந்தார். பூஜை முடிந்தவுடன் பிக்ஷைக்கு வந்து அமர்ந்தார்கள். அப்பொழுது அப்பாகுட்டி சாஸ்திரிகளை வரச்சொல்லி, "பூஜையின் போது ஏதோ சொன்னாயே, அதை திரும்பச் சொல்" என்றார். தினமும் ஸ்ரீபெரியவாள் பிக்ஷைக்கு போவதற்கு முன், ஒரு அளவு பசுவுக்கு எடுத்து வைப்பார். பிறகு ஒரு மந்தார இலையில்



RENEW / SUBSCRIBE immediately: helpdesk@madhuramurali.org

ஒரு உரித்த ஆரஞ்சு பழத்தையும், மங்குஸ்தான் பழங்களையும் வைத்து, சாஸ்திரிகளிடம் கொடுத்து, "நீயே நேரில் சென்று பிரசாதம் கொடுத்து வா" என்றார். "மங்குஸ்தான் பழத்தை பிழிந்து அதன் ரஸத்தை மூன்று தடவை அந்த குழந்தையின் நாக்கில் வை. வேறு எதுவும் வைத்யம் வேண்டாம். குழந்தை குணமாகி விடும்" என்றார். அவரும் குதிரைவண்டியில் கிளம்பி சென்றார்.

பிறகு பிக்ஷை முடிந்தவுடன் என்னிடம், "அதனால்தான் நாம் வரும்பொழுது, வெங்குடி டாக்டர் வீட்டு வாசலில் வழக்கம் போல் யாரையும் காணோம்" என்றார்.

ஸ்ரீமஹாபெரியவாள் சொன்னபடி செய்ய அந்த குழந்தையும் குணம் அடைந்தான் என்பதை சொல்லவும் வேண்டுமா! ஸ்ரீவெங்குடி ராமமூர்த்தி டாக்டர் ஸ்ரீமஹாபெரியவாள் எங்கிருந்தாலும், அங்கு வந்து ஸ்ரீபெரியவாளுக்கு வைத்யம் பார்த்து விட்டு போவார் என்று எல்லோருக்கும் தெரிந்திருக்கும். ம்ருத்யுஞ்சயன் ஆக ஸ்ரீமஹாபெரியவாள் அந்த குழந்தையை காப்பாற்றினார். அந்த குழந்தை இன்று டாக்டராகி, பலருக்கு வைத்யம் பார்த்து வருகின்றார். (நிகழ்வுகள் தொடரும்)


**Dr. Shriraam Mahadevan**

MD (Int Med), DM (Endocrinology)
Consultant in Endocrinology and Diabetes
Regn. No 62256

**ENDOCRINE & SPECIALITY CLINIC**

**New 27/1, Old 11/1, (Gr.Floor), 4th Cross Street,**
**R.K.Nagar, Mandaveli, Chennai - 600 028.**
**(Next to Krishnamachari Yogamandiram)**
**Tel: 2495 0090Mob: 94458 80090**
E-mail: mshriraam@gmail.com,www.chennaiendocrine.com
www.chennaiendocrine.com





RENEW / SUBSCRIBE immediately: helpdesk@madhuramurali.org

"மதுரமுரளி" ஆண்டு சந்தா ரூ 120. For Details: **+91-44-24895875**

- **D.D /M.O/Cheque in name of Guruji Sri Muralidhara Swamigal Mission** ஏற்றுக்கொள்ளப்படும்.
- சந்தா அனுப்ப முகவரி: **Guruji Sri Muralidhara Swamigal Mission, No. 51, 7th Avenue, Ashok Nagar, Chennai - 83.**
- ஒரு வருட சந்தா மட்டுமே பெற்றுக்கொள்ளப்படுகிறது.
- கொரியரில் பெற விரும்புவோர் கொரியர் செலவை தனியாக செலுத்தி பெறலாம்.
- ஏற்கனவே சந்தாதாரராக இருப்பவர்கள் தங்களது சந்தாவை புதுப்பிக்குமாறு கேட்டுக்கொள்கிறோம்.
- மதுரமுரளி விவரங்களுக்கு helpdesk@madhuramurali.org என்ற மின்னஞ்சலை தொடர்பு கொள்ளவும்.


* Publisher : S.Srinivasan on behalf of Guruji Sri Muralidhara Swamigal Mission


* Copyright of articles published in Madhuramurali is reserved. No part of this magazine may be reproduced, reprinted or utilised in any form without permission in writing from the publisher of Madhuramurali.


## ஸ்ரீஸ்வாமிஜி அவர்களின் தரிசனம்

| | |
|---|---|
| ஏகாதசி | டிசம்பர் 2, 18 ஜன 1, 16 |
| டிச 5 | நாராயணதீர்த்தர் விழா ஆழ்வார்பேட்டை |
| டிச 7 | P.S High Sec School Book Release - மூகபஞ்சசதி |
| டிச 11 | திருப்பூர் பெருமாள் கோவில் |
| டிச 18 | மாலை வைதிகஸ்ரீ விழா - அயோத்யா மண்டபம் |
| டிச 21 | ஹனுமத் ஜெயந்தி |
| டிச 25 | மஹோதயா ஹால் அசோக் நகர்<br>காலை **கோபகுடீரம் ஆண்டு விழா** /<br>மாலை **மதுரகீதம் பஜனை போட்டி - Finals** |
| ஜன 1,2015 | **வைகுண்ட ஏகாதசி** - மஹாமந்திர கூட்டு ப்ரார்த்தனை விவேகானந்தா பள்ளி அம்பத்தூர் |

ஸ்ரீஸ்வாமிஜி அவர்களுக்குத் தெரிவிக்க வேண்டிய விஷயங்களை
Dr.A.BHAGYANATHAN, Personal Secretary to
**HIS HOLINESS SRI SRI MURALIDHARA SWAMIJI**
New No. 51, Old No. 24, 7th Avenue, Ashok Nagar, Chennai - 83.
Tel. : +9144-2489 5875, Email : contact@namadwaar.org என்னும் முகவரிக்கு அனுப்பவும்.

**To know about Satsang schedule, events & also to register your prayers, please call +91-9382393833**




RENEW / SUBSCRIBE immediately: helpdesk@madhuramurali.org